மாண்புமிகு திரு மு. கருணாநிதி: (அ) தமிழ் நாட்டு லஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுதான் அறிவுரை கூறும் ஒழுங்கு முறை வழக்குகளில் தமிழ்நாடு அரசாங்கப் பணியாளர் தேர்வுக் கழகத்துடன் அரசாங்கம் ஆலோசிக்கத் தேவையில்லை எனவும், இதன் பொருட்டு தமிழ்நாடு அரசாங்கப் பணியாளர் தேர்வுக் கழக ஒழுங்கு முறை விதிகள் தக்கவாறு திருத்தப்படலாமெனவும் கருத்துத் தெரிவித்துள்ளது.

(இ) இதுபற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

THIRU T. MARTIN: Mr. Speaker, Sir, may I request the Hon. Minister to state whether the Government consider the opinion given by tht Madras Public Service Commission as binding on the Government or as a recommendatory one in arriving at a final conclusion in a given case?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி: அதைக் கட்டுப்படுத்துவது என்று கூற முடியாது. ஆகவே தான், அந்த யோசனையை அரசு ஆலோசித்து வருகிறது என்று குறிப்பிட்டேன்.

Portrait of Sri Sankarachariar.

* 112 *Q.*—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether at the end of 1966, the portrait of His Holiness Sri Sankarachariar of Kanchi Kamakoti Peetam was exhibited in a disgraceful manner at the premises of a communal party office at Kumbakonam; and

(*b*) if so, whether the Government will take suitable steps to prevent such occurrences in future?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. நா. காசிராமன்: தலைவர் அவர்களே, இது கும்பகோணத்திலே நடந்த ஒரு விஷயம். எல்லாப் பத்திரிகைகளிலும் வந்தது. சென்ற பொதுத் தேர்தலிலே பல கட்சிக்காரர்கள், முக்கியமான தலைவர்கள் எல்லாம் இம்மாதிரி சங்கராச்சாரியார் போன்ற ஒரு உருவத்தை வைத்து வகுப்புவாதக்காரர்கள் அதை அவமானப்படுத்திய வகையில் நடந்து கொண்டபோது, அதை பிரசாரத்திற்கு உபயோகித்துக் கொண்டார்கள். இம்மாதிரி இனி மனதைப் புண்படுத்தும்படியான மத சம்பந்தமான விஷயங்கள் நடக்காமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்த கேள்வி எழுப்பிய திரு. காசிராமன் அவர்களை ஆதரித்து அங்கு அப்பொழுது திராவிடக் கழகம் வேலை செய்த நேரத்தில் இப்படி அவர்களுடைய கட்சி அலுவலகத்திற்கு முன்பாக சங்கராச்சாரியார் அவர்களுடைய படம் அவமானமாக வைக்கப்பட்டதாக போலீசுக்குத் தகவல் வந்தது. போலீஸார் சென்று பார்த்த நேரத்தில் அந்தப் படம் அங்கு இல்லை யென்று தகவல் அளித்தார்கள்.

DR. H. V. HANDE: Sir, are the Government aware that the Christians view Jesus with great veneration and the Muslims regard Prophet with great respect and large sections of the Hindu community consider Sankaracharya and Ahobila Mutt Jeer with great respect and veneration? Nowadays it has become

a fashion for some people to ridicule the Hindu religious heads. So, will this Government give clear-cut instructions to all the police officers to take immediate action whenever religious sentiments of Hindus or Christians or Muslims or any other religionists are hurt?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எந்த மதத்தையும் அல்லது மதத் தலைவரையும், மதப் பிரசாரகரையும் புண்படுத்துகின்ற அளவிலே யாரும் நடந்துவிடக் கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் கூறிய யோசனையை இந்த அரசு ஏற்றுக்கொண்டு அதற்குத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

திரு. பெ. சீனிவாசன் : சார், மதவாதிகளுக்கு மதத்தைப் பற்றிய பிரசாரம் செய்ய எவ்வளவு உரிமையுண்டோ அந்த அளவுக்கு நாஸ்திகர்களுக்கு மதத்தை எதிர்த்துப் பேச உரிமையுண்டு என்பதை இந்த அரசு ஒப்புக்கொள்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எல்லோருக்கும் எல்லா உரிமைகளும் உண்டு. அந்த எல்லா உரிமைகளும் அளவோடு இருக்க வேண்டும்.

திரு. கே. பி. எஸ். மணி : சார், மதம் மக்களுக்கு அபின் என்று சொல்கிறார்களே. அப்படி சொல்கின்ற பகுத்தறிவு ஆட்சியாளர்கள் ஆளுகின்ற இந்த தேசத்திலே மீண்டும் மதத்தை வலியுறுத்தி பிரசாரம் செய்கின்ற நேரத்தில், மதம் மக்களுக்கு அபின் என்ற முறையில் அந்த மதப்பிரசாரங்களைத் தடை செய்ய இந்த அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த அரசைப் பொறுத்தவரையில் எந்த மதத்தையும் அல்லது மதப் பிரசாரத்தையும் தடை செய்கின்ற நோக்கம் இல்லை.

திரு. நா. காசிராமன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது என்னை சம்பந்தப்படுத்தி சொன்னதால் ஒரு விளக்கம் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவை தலைவர்: கடைசியில் சொல்லுங்கள்.

Fire accident at New Kalpakkam

113 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether about seventy five huts and fishing implements were destroyed by fire in New Kalpakkam village in Chingleput district;

(*b*) the reason for the fire; and

(*c*) the extent of loss sustained by the fishermen?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி.: (அ) செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த புதிய கல்பாக்கம் கிராமத்தில் 5—5—1968 தேதியன்று 69 குடிசைகள் மட்டுமே எரிந்து போனதாக அறிவிக்கப்பட்டது.

(இ) திரு. மேகநாத செட்டியார் என்பவரின் வீட்டில் அடுப்பை எவரும் கவனிக்காததால் தீப்பொறி பறந்து கூரையில் பற்றியதனால் இந்தத் தீ விபத்து எற்பட்டதென்று தெரிய வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS